**வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றம் - 2022**

-----------------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, மன்றத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்கதயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாகவுள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம், மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு மன்றம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறானகூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை கருத்திற் கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ்கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள்தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மன்றம் இணங்கியிருந்ததா என்பதும்,

- மன்றம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்பு

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான உள்ளகக் கணக்காய்வு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளல், பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யதல் மற்றும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணிச் செல்லல், முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்துடன் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்தல் மற்றும் வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் என்பவற்றிற்காக் நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக் கொள்ள போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “சிறப்பாக திட்டமிடப்பட்ட” உள்ளக

கணக்கீட்டுக் கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றிற்காக பிரதான கணக்கீட்டு அறிக்கை நிறுவத்தினால் பேணிச் செல்லல் அவசியமாக உள்ளது.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலக்கம் 2245/31 மற்றும் 2021 செப்டம்பர் 17 திகதிய அதிவிஷேட வர்த்தமானி பிரகாரம் இந்த மன்றத்திற்கு காப்புறுதி நிறுவனங்களால் அனுப்பப்பட்டிருந்த ரூபா 72,177,176 ஆன காப்புறுதி பங்களிப்பு தொடர்பாக சரியான தன்மையை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அனைத்து காப்புறுதி நிறுவன முகவர்களுடனும் கலந்துரையாடி காப்புறுதி நிறுவனத்தினால் வழங்கும் காப்புறுதிப் பணம் சரியானவை என நிறுவன உள்ளக கணக்காய்வாளரின் அல்லது<br><br>பிரதான நிறைவேற்று அலுவலர் ஒருவரின் உறுதிப்பாட்டுடன் வழங்குமாறு அறிவிக்கப்பட்டது. | குறித்த காப்புறுதி நிறுவனங்களினால் அனுப்பப்படும் பணத்தின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள குறித்த நிறுவனங்களின் உறுதிப்படுத்திய நிதிக்கூற்றுக்களை பெற்றுக் கொள்ள வேண்டும். |

## 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஆண்டினுள் மன்றத்திற்கு கிடைத்திருந்த வீதி சமிக்ஞை பலகைகளிற்காக செலுத்த வேண்டிய ரூபா 6,586,736 இற்குரிய கணக்குகளில் ஒதுக்கீடு மேற்கொள்ளாத காரணத்தால் ஆண்டின் செலவு மற்றும் பொறுப்புக்கள் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | தவறுதலாக 2022 ஆண்டிற்குரிய செலவாக கவனத்திற் கொள்ளாததுடன் அத்தவறை 2023 நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய செலவு மற்றும் ஒதுக்கீட்டை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 186,550,001 ஆன போதும் நிதி நிலைமை கூற்றில் அது ரூபா 185,167,087 ஆக காட்டியிருந்ததால் ஆண்டின் நிலையான வைப்புக்களின் பெறுமதி ரூபா 1,382,914 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீள் முதலீடு செய்யப்பட்ட (Reinvest) ரூபா 1,382,914 ஆன வட்டி வருமானம் தவறுதலாக 2022 ஆண்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படும் போது கவனத்திற் கொள்ளாததுடன் அத்தவறை 2023 நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய நிலையான வைப்பு பெறுமதி சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | ஆண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 14,008,316 ஆன போதும் அது 13,320,837 ஆக காட்டியிருந்ததால் ஆண்டின் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 687,479 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கு தயாரிக்கும் போது சில நிலையான வைப்பு வட்டி வருமானங்களை கவனத்திற் கொள்ளாததால் ஆண்டின் நிலையான வைப்பு வட்டி குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் அதனை 2023 நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய நிலையான வைப்பு வட்டியை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு இறுதியில் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 7,348,671 ஆன போதும் அது நிதிநிலைமை கூற்றில் ரூபா 8,043,476 ஆக காட்டியிருந்ததால் பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 694,805 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்கிலக்கம் 204-60-01-00026713-3 இற்குரியதாக 2022.12.31 திகதிகு பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் கூடுதலாக கணக்கிடப்பட்டுள்ளதுடன் அதனை 2023 நிதிக்கூற்றுக்களில் சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும். | பெற வேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்ட, விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமை | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>• 4.2.6 பிரிவு | காலாண்டு, அரையாண்டு, வருடாந்த ரீதியாக நிறுவனத்தின் செயலாற்றுகை அறிக்கை மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதும் மன்றத்தினால் மீளாய்வாண்டினுள் முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உள்ளக முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நடாத்தும் போது கூட்ட அறிக்கை பேணப்படாததுடன், அரச கணக்காய்வு பிரிவினால் 2022.09.15 திகதி செய்த தெளிவுபடுத்தலின் பிரகாரம், 2022.09.15 திகதி முதல் அவ்வறிக்கையை பேணிச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| • 5.1.3 பிரிவு | நிதியாண்டு ஆரம்பிக்க 15 நாட்களுக்கு முன்னர் செயல் நடவடிக்கை திட்டத்தை அங்கீகரித்து குறித்த நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டிய போதும் 2022 செயல் நடவடிக்கை திட்டத்திற்காக மன்றத்தினால் அங்கீகாரம் வழங்கியிருந்தது 2022 மார்ச் 30 திகதியிலே ஆகும். | செயல் நடவடிக்கை திட்டம் 2022.12.29 திகதி மன்றப் பத்திர இலக்கம் 2021-17/06-01 ஊடாக வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தின் அங்கீகாரத்திற்கு சமர்பித்ததுடன் 2022.01.04 திகதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு சமர்பிக்கப்பட்டதுடன் அங்கு திருத்திய பின்னர் MT/05/03/01-2022 ஊடாக 2022.04.29 திகதி செயல் நடவடிக்கை திட்டத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. எதிர்காலத்தில் தங்களால் சுடடிக் காட்டிய 2003 ஜுன் 02 PED/12 சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக மேலும் அறிவிக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| • 8.8 பிரிவு | நி.பி 135 இன் கீழ் நிதி அதகாரக் கையளிப்பு வருட ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதும் அதனை அங்கீகரித்திருந்தது 2022 மார்ச் 30 திகதியாகும். | 2021.12.29 திகதி தேசிய மன்றத்தின் அங்கீகாரம் கிடைத்து திருத்தம் மேற்கொண்ட பின்னர் MT/04/11/02/RS இலக்க 2022.05.25 திகதிய கடிதம் மூலம் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. 2023 அதிகாரப் பகிர்வு ஆவணத்திற்காக 2022.10.27 திகதி தேசிய மன்றத்தின் அங்கீகார கிடைத்த பின்னர் 2023.01.09 திகதி அமைச்சின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் உரியவாறு தேசிய மன்றத்தில் அங்கீகாரத்திற்காக சமர்பிக்க தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 69,109,561 மிகையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 25,504,993 ஆக இருந்தமையால் முன்னைய ஆணடுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 43,604,568 தொகையான வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 முக்கிய வருமன மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

(அ) மன்றத்திற்கான முக்கிய வருமான மூலமான காப்புறுதி கம்பனிகளால் மேற்கொள்ளப்படும் வருமானம் 1 சதவீதத்திலிருந்து 2 சதவீதம் வரை அதிகரித்த காரணத்தால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அவ்வருமானம் ரூபா 20,457,431 இனாலும் நிலையான வைப்புக்கள் மற்றும் திறைசேரி வைப்புகளின் மீதான வட்டி வகிதம் மீளாய்வாண்டில் அதிகரித்த காரணத்தால் அவ் வட்டி வருமானம் ரூபா 36,308,696 ஆலும் அதிகரித்திருந்து.

(ஆ) முன்னைய ஆண்டுகளிற்கு ஒப்பாக செலவு ரூபா 13,161,557 இனால் அதிகரித்திருந்ததுடன் அதற்காக மோதி தப்பிச்செல்லும் விபத்துக்களுக்கான நட்டஈட்டு கொடுப்பனவு ரூபா 10,725,000 இனால் அதிகரித்தமை மற்றும் நிறுவனத்தின் சொத்தொன்றாக காணப்பட்ட ரூபா 3,803,686 ஆன தேறிய பெறுமதியிலான சாரதி பயிற்ச்சி உபகரணங்களை வேறொறு நிறுவனத்திற்கு அன்பளிப்பு செய்தமை முக்கிய காரணமாக இருந்தது.

.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டில் காப்புறுதி வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 40 சதவீத வளர்ச்சியும் நிலையான வைப்பு மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்த வட்டி வருமானம் 164 சதவீதத்தால் வளர்ந்தமை காரணமாக மன்றத்தின் மொத்த வருமானத்தின் வளர்ச்சி 77 சதவீதமாக இருந்தது..

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் செலவுகளின் அதிகரிபபு 27 சதவீதமானதுடன் அதற்காக வீதி விபத்துக்களிற்காக நட்டஈடு செலுத்துதல் 168 சதவீதத்தால் வளர்ந்தமை காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தை தேசிய ஆணைக்குழுவாக நிறுவும் பிரதான நோக்கில் தேசிய மன்றம் தொடங்கப்பட்டு 17 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் 2023 சனவரி 24 திகதி வரையும் அந்நிறுவனம ஆணைக்குழுவொன்றாக நிறுவப்பட்டிருக்காததுடன் இதன் காரணமாக இம் மன்றத்தின் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சட்டப்பூர்வ அதிகாரம் எதுவும் வழங்கப்பட்டிருக்காததுடன் முறையான பதவியணியினரையும் நியமனம் இயலாதிருந்தது. | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய மன்றத்தை தேசிய போக்குவரத்து பாதுகாப்பிற்கான ஆணைக்குழுவாக நிறுவுவது தொடர்பாக தயாரிக்கப்பட்ட சட்ட நகழ் சட்ட நகழ் உருவாக்குனரிற்கு அனுப்பப்பட்டதன் பின்னர், சட்ட நகழ் உருவாக்குனரால் திருத்தத்துடன் 2022.03.29 திகதி மற்றும் 2022.05.18 திகதி மீண்டும் போக்குவரத்து அமைச்சிற்கு அனுப்பியதன் பின்னர் சட்ட நகழ் உருவாக்குனரிற்கு அனுப்பப்பட்டது. 2022.12.16 திகதி இராஜாங்க அமைச்சரினால் வழங்கப்பட்ட ஆலோசனை பிரகாரம் சட்ட நகழ் மீண்டும் திருத்தப்பட்டு 2022.12.16 திகதி மேலதிக செயலாளர் (அபிவிருத்தி ii) இனால் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் சட்ட உத்தியோகத்தரிற்கு அனுப்பப்பட்டுள்து. | வீதிப் பாதுகாப்புக்கான தேசிய ஆணைக்குழுவை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மன்றத்தன் நடைமுறைக் கணக்கில் 2022 திசெம்பர் 31 திகதியன்று ரூபா 45 மில்லியன் தொகை காணப்பட்டதுடன் மன்றத்தின் வருமான பெறுவனவிலிருந்து மாதாந்த செலவினத்தை மேற்கொள்ள தேவையான அளவு பணத்தை நிறுத்திக் கொண்டு மேலதிக தொகையை முதலீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 2022 திசெம்பர் 31 திகதி நிறுவன நடைமுறைக் கணக்கில் | எதிர்காலத்தில் அதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | மேலதிக தொகையை முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ரூபா 47,858,688 ஆன மீதி காணப்பட்டது.

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் காப்புறுதி நிறுவனங்களிலிருந்து ரூபா 72,177,176 ஆன பங்களிப்பு தொகை கிடைத்திருந்ததுடன் அவற்றில் ரூபா 17,100,000 தொகை நட்டஈடாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்தொகை பங்களிப்புத் தொகையின் 24 சதவீதமானது. இலங்கையினுள் இடம்பெறும் வாகன விபத்துக்கள் தொடர்பாக கவனத்திற் கொள்கையில் நட்டஈடு பெற்றுக் கொள்வது தொடர்பாக பொது மக்களின் அறியாமை இதற்கு காரணமாகவுள்ளதாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வாகன விபத்துக்கள் தொடர்பாக கவனத்திற் கொள்ளும் போது நட்டஈடு பெற்றுக் கொள்வது தொடர்பாக பொது மக்களின் அறியாமை இதற்கு காரணமாக அமைந்துள்ளது. | நட்டஈடு வழங்குவது தொடர்பாக பொது மக்களை அறிவூட்ட வேண்டும். |
| (ஆ) | இலக்கம் 2245/31 மற்றும் 2021 செப்டம்பர் 17 திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் 2 பிரிவு பிரகாரம் 2 சதவீத காப்புறுதி பங்களிப்புத் தொகையை அறவிட வேண்டிய போதும் 2 தனியார் காப்புறுதி நிறுவனங்கள் 1 சதவீத பங்களிப்பு தொகையை மாத்திரம் செலுத்தியிருந்ததுடன் மற்றைய 1 சதவீத ரூபா 1,262,404 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக குறித்த காப்புறுதி நிறுவனத்தை அறிவூட்ட நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அந் நிறுவனங்களிலிருந்து குறித்த தொகையை வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்திற்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிவிக்கிறேன். | சரியான காபபுறுதி வருமானத்தை நிறுவனத்திற்கு பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 திகதி பொது நிதி சுற்றறிக்கையின் இலக்கம் (4) 01/2014 (ஈ) பிரிவு பிரகாரம் மீளாய்வாண்டில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்துடன் தயாரித்திருந்த பெறுகைகள் திட்டத்தில் குறித்த பண்டங்கள், சேவை மற்றும் பல கருத்திட்டங்களை மேற்கொள்வதற்காக ரூபா 335.14 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதும் 2022 திசெம்பர் 31 திகதியளவில் அத்திட்டத்தின் ரூபா 186.8 மில்லியனிற்குரிய | ரூபா 150 மில்லியனான மதிப்பிடப்பட்ட தொகையை ஒதுக்கியுள்ள அரச கணக்குகள் செயற்குழுவின் கட்டளையொன்றாக செயற்படும் இலங்கை பொலீஸிற்கு தேவையான தொழிநுட்ப உபகரணங்களை வழங்குவது தொடர்பான பெறுகை நடவடிக்கைகள் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சினால் மேற்கொள்ளப்படும்.<br><br>ரூபா 2.7 மில்லியனான 2 கருத்திட்டங்கள் 2022.08.18 திகதி மேற்கொண்ட திருத்திய | திட்டம் பிரகாரம் செயற்பட தேவையான ஏற்பாடுகளை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| 09 பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | பெறுகைகள் திட்டதிற்கு சேர்க்கப்பட்ட புதிய கருத்திட்டங்கள் ஆவதுடன், திருத்திய பெறுகைகள் திட்டம், செயல் நடவடிக்கை திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டத்திற்கு தேசிய மன்றத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்திற்கு சமர்பிக்கப்பட்டதுடன், அதற்காக 2022.11.02 திகதி அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதனால் 2022 ஆண்டு முடிவடைய முன்னர் அக் கருத்திட்டதிதை பூர்த்தி செய்ய இயலாதிருந்தது. ரூபா 27.6 மில்லியனான கருத்திட்டம் 2022.08.18 திகதி பெறுகைகள் திட்டம் திருத்தப்படும் போது அகற்றப்பட்டது. ரூபா 6.5 மில்லியனான கருத்திட்டம் 2022 ஆண்டில் நிலவிய இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்ட காரணத்தால் பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை 9.2 (இ) பிரிவு பிரகாரம் மன்றத்தின் அமைப்புரீதியான கட்டமைபு மற்றும் அங்கீகார ஆளணி திறைசேரியின் பொது முயற்ச்சிகள் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட வேண்டிய போதும் இது வரை இந் நிறுவனத்தை ஆணைக்குழுவொன்றாக நிறுவியில்லாததால் போக்குவரத்து அமைச்சின் 14 அலுவலர்களும், இலங்கை புகையிரத திணைக்களத்தின் 4 அலுவலர்களும், இலங்கை போக்குவரத்து சபையின் ஒரு அலுவலருமாக 19 அலுவலர்கள் இணைக்கப்பட்டு குறித்த கடமைகளை மேற்கொள்ளப்பட்டு செல்கின்றன. | வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தை ஆணைக்குழு ஒன்றாக நிறுவியதன் பின்னர் சரியான ஆளணியை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறிக்கிறேன். | மன்றத்திற்கான ஆளணி ஒன்றை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

4. **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

4.1 **வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் பொதுக் கணக்குகள் குழு வழங்கிய பணிப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு 2021 ஆண்டு யூலை மாதம் திருத்திய பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்து அதிக வேகம் காரணமாக ஏற்படும் வீதி விபத்துகளைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை நடாத்தியிருந்ததுடன், 2022 ஆம் ஆண்டின் போது குறித்த நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 150 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்ட போதும் தொழில்நுட்ப உபகரணங்களை கொள்வனவு செய்ய மேற்கொள்ள வேண்டிய பெறுகை நடவடிக்கைகள் முடியாத காரணத்தால் மொத்த ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கடந்த ஆண்டிலும் மேற் குறிப்பட்ட பணிப்புரை பிரகாரம் இந்த கடமையை மேற்கொண்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்ளப்பட்ட விலை மணு கோரும் பதிவேட்டை தயாரித்து தேவையான முன்நடவடிக்கை மேற்கொள்ள போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.<br><br>முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் இராஜாங்க மதிப்பிற்குரிய அமைச்சரினால் அச் செற்பாட்டை மேற்கொள்ள முன்னர் அதன் உற்பத்தித்திறன் தொடர்பாக மீண்டும் மீளாய்வு செய்ததன் பின்னர் குறித்த பொருட்களை கொள்வனவு செய்யுமாறு ஆலோசனை வழங்கப்பட்டது. | கணக்குகள் குழுவின் பணிப்புரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஆ) | உலக சுகாதார அமைப்பினால் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் மன்றத்திற்கு ரூபா 1.7 மில்லியன் அனுப்பப்பட்டிருந்ததுடன் 2022 ஆண்டு இறுதிவரை அத் தொகையை பயன்படுத்தி எவ்வித கருத்திட்டத்தையும் மேற்கொண்டிருக்கவில்லை. | வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தினால் செயற்படுத்தும் கருத்திட்டத்திற்கு தேசிய மன்ற நிதியத்திலுள்ள பண பயன்படுத்தப்படுகிறது. உலக சுகாதார அமைப்பினால் வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்திற்கு அனுப்பிய தொகை ஏதேனும் குறித்த கருத்திட்டமொன்றிற்கு ஈடுபடுத்தாததால் அத் தொகை தேசிய மன்ற நிதியத்திற்கு செலவு வைத்துள்ளதாக அறிவிக்கிறேன். | வெளிநாட்டு உதவியை உச்ச வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும். |

4.2 **கணக்காய்வு குழு**

------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 யூன் 29 ஆம் திகதிய DMA/2009/01 ஆம் இலக்க முயற்சிகள் | பிரச்சினையை தீர்த்துக் கொண்டு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| சுற்றறிக்கை பிரகாரம் ஆண்டிற்கு குறைந்தபட்சம் 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்த வேண்டிய போதும் மீளாய்வாண்டில் அவ்வாறான கூட்டம் 01 தடவை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | குழுக் கூட்டங்களை நடாத்துவதாக மேலும் குறிப்பிடுகிறேன். | எடுக்க வேண்டும். |

**4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு மற்றும் PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவு பிரகாரம் நிதியாண்டு தொடங்குவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் பாதீடு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் மன்றம் 2022 மார்ச் 30 இலேயே பாதீட்டினை அங்கீகரித்திருந்தது. | பாதீட்டை 2021.12.29 திகதி மன்றப் பத்திர இலக்கம் 2021-17/06-01 ஊடாக வீதிப் பாதுகாப்பிற்கான தேசய மன்றத்தின் அங்கீகாரத்திற்கு சம்பிக்கப்பட்டதுடன், அதற்காக தேசிய மன்றத்தின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் 2022.04.25 திகதி அமைச்சு செயலாளரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட பாதீட்டிற்காக 2022.10.27 திகதி தேசிய மன்றத்தின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் குறித்த தரப்பினரிற்கு அனுப்ப நடவடிக்கை எடுத்ததாக மேலும் அறிவிக்கிறேன். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 4.4 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிறுவனத்தினால் நிலைபேறான 03 இலக்குகளை வீதிப் பாதுகாப்பிற்குரியதாக இனங்கண்டிருந்த போதும் கணக்காய்வு திகதியளவிலும் 2017 ஆகஸ்ட் 14 திகதிய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் இலக்கம் NP/5P/5dg/17 கொண்ட சுற்றறிக்கை பிரகாரம் நிறுவனத்திற்குரியதாக நிலைபேறான அபிவிருத்தித் திட்டமொன்றை தயாரித்திருக்கவில்லை. | வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றம் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சிற்கு இணைந்த நிறுவனமொன்றாக செயற்படும் நிறுவனமொன்றாகையால் நிறுவனத்திற்குரியதாக விஷேட அபிவிருத்தி திட்டமொன்றை இதுவரை தயாரிக்காததுடன், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் தயாரிக்கப்படும் நிலைபேறான அபிவிருத்தி திட்டத்திற்கு வீதிப் பாதுகாப்பு தொடர்பாக உள்ளடங்க வேண்டிய விடயங்கள் சம்பந்தமாக அமைச்சிற்கு தேவையான உதவியை வீதிப் பாதுகாப்பிற்கான தேசிய மன்றத்தினால் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்கண்டு திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |